உ
சிவமயம்



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும்
சுதுமலை (ஈஞ்சடிவைரவர் கோயிலடி) யை வசிப்பிடமாகக் கொண்ட

# அமரர் திருமதி பாக்கியம் கனகலிங்கம்

அவர்களது சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**03-12-2003**

அமரர்

# பாக்கியம் கனகலிங்கம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த


# நினைவு மலர்

03.12.2003

# சமர்ப்பணம்

பாரச் சுமைகளெல்லாம்
பருதிமுன்னர்ப் பனிபோலத்
தீரச் சுமைந்திறக்கித்
தெய்வவரு ளோடுழைத்து
வீரத் திருமகளாய்
விண்ணடைந்த அம்மாவை
ஆரப் பணிந்திறைஞ்சி
அர்ப்பணித்தோம்
பாதங்களுக்கு
இம்மலரை

உ



தோற்றம்:
30-10-1917

மறைவு:
03-11-2003

அமரர்

## திருமதி பாக்கியம் கனகலிங்கம்

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மண்ணு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவீகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



## வாழ்க்கை வரலாறு

திருமூலர் சுவாமிகளினால் திருநாடு என்று அழைக்கப்பட்டது இலங்கைத் திருநாடு அதன் வடபால் சிகரமென விளங்குவது யாழ்ப்பாணம், அங்கு ஈடுஇணையில்லாத ஊராக விளங்குவது சுதுமலை, சித்தங்கேணி என சில கிராமங்கள் போற்றப்படுகின்றது இங்கு சைவமும், தமிழும் இரு கண்களாகப் போற்றும் சைவப்பெருமக்கள் வாழும் சிறப்புப் பெற்றதும் இப்பதி

சித்தர்கள், பண்டிதர்கள், பாவலர்கள், புலவர்கள்,அறிஞர், கலைஞர்கள், வாழ்ந்த வாழுகின்ற கிராமம் இதுவாகும், இக் கிராமத்தில். கந்தப்பு, சின்னாச்சிப்பிள்ளை இருவரும் செய்த தவப்பயனால் அமரர் பாக்கியம் அவர்கள் மூத்தமகளாக 30.10.1917ல்இப்பூமியில் அவதரித்தார் இவரின் சகோதரர்களாக கனகம்மா,செல்லத்துரை, பூராணம், துரையப்பா என இரு ஆண்சகோதர்களும் இரு பெண் சகோதர்களும் பிறந்தார்கள் வையத்துள் நல்வாழ்வு வாழ்ந்த பாக்கியம் அவர்கள் மணப்பருவம் அடைந்ததும் இவரது பெற்றோர் சுதுமலையைச் சேர்ந்த சின்னையா சுகசாமிப்பிள்ளை தம்பதிகளின் மூத்தமகன் கனகலிங்கம் என்பவரை அன்னாருக்கு ஏற்ற நல்ல மனைவிக்கேற்ற கணவனாக பெரியோர்கள் விருப்பத்துடன் 1939ம் ஆண்டு திருமணம் செய்து வைத்தார்கள் இல்லற வாழ்வில் இரண்டறக்கலந்து சந்தோஷமாக வாழந்து வருகின்ற காலத்தில் இருவரின் தவப்பயனால் இராசாத்தி, புஸ்பராணி, துரைராசா, மகேஸ்வரி, என நான்கு பிள்ளைகளைப் பெற்று மேலும் சந்தோசமாக வாழ்ந்து கொண்டு இருக்கும் காலங்களில் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல வாழ்கை அமைத்து கொடுக்க

வேண்டும் என்ற விருப்பத்தினால் மூத்த மகள் இராசாத்திக்கு சுதுமலை சேர்ந்த (பிரபல விசகடிவைத்தியர்) நல்லையாவை திருமணம் செய்து வைத்தார்கள் இரண்டாவது புஸ்பராணிக்கு பொன்னம்பலத்தையும், மூன்றாவது மகன் துரைராசாவுக்கு நித்தியலக்சுமியையும் நான்காவது மகள் மகேஸ்வரிக்கு வேலாயுதத்தையும் திருமணம் செய்து வைத்தார்கள் இவர்களும் இன்புற்று வாழ்ந்து கொண்டு இருக்கும் காலங்களில் பேரப்பிள்ளைகளாக தர்மகுலராணி, கேதீஸ்வரன் ராகினி, யோகராசா நந்தனி, ஜெயராணி(ராதா) சிவகுமார், யோகராணி (ரமணி)ஸ்ரீபத்மநாதன்(பரந்தன்இரசாயனக்கூட்டுதாபணம், நிலாஆயுள்வேத மருந்தகம் கிளிநொச்சி), ஜெகதீஸ்வரன் கமலா, ஜெநந்திராணி தட்சணாமூர்த்தி, கலாராணி(கலா) ஸ்ரீமூர்த்திவேல், பாஸ்கரன் தமிழினி, கஜந்தினி கிருபாகரன் ,பிரபாஸ்கரன், சுபபாஸ்கரன்,ஜெயபாஸ்கரன், குருபாஸ்கரன்,ஜெயந்தினி, சுகந்தினி,சாந்தினி, வரதராசன் ரூபி ,வாசுதன் வளர்மதி ,வக்சலா சுபாஸ்கரன் ,சுசீலா,வசந்தன், வாகீசன், கௌசலா. என பேரப்பிள்ளைகளையும்கண்டு

பூட்டப்பிள்ளைகளாக அனோஜா,அனோஜன், றுக்சன்,கஜன்,யோகனா,நவீன்,நவன், லக்ஷன்,சிவானி, விதுஷன்,லக்ஷனா,யோகிதா,பிரியா(நிலா) கார்த்திகா,ஜனனி, கவிந்தன்,தர்சிகா,தருசன்,சிவேக்,தனுஷன், திவ்வியா,அபிராமி, என பூட்டப்பிள்ளைகளையும் கண்டு நல்லதொரு மகளாக அன்பான சகோதரியாக பண்புள்ள மருமகளாக பாசமிகு மனைவியாக ஆருயிர்த் தாயாக, மதிப்பிற்குரிய மாமியாராக, அன்பே உருவான பேத்தியாக உற்றார் உறவினர்களின், பேரன்பிற்குரியவராகவும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து 03.11.2003 அன்று தெய்வத்துள் ஒன்றாக வைக்கப்பட்டார்.

ஓம்சாந்தி! சாந்தி!!சாந்தி!!!



**அம்மா என்றழைக்க உறவில்லை இனி எமக்கு**

ஆயிரம் கோடி இருந்தென்ன நீ இல்லை எம் அருகே
ஆசைமுகம் காணவில்லை அம்மா உன் அன்பு முகம் காண்பதெப்போ
ஆறுதல் வார்த்தை கூறி அரவணைக்க யாருண்டு இனி எமக்கு
ஆளாக்கி விட்டு எம்மை. மீளாத்துயில் கொண்டதேனோ
ஆறுதல் அளிப்பாய் என்று நினைக்க ஆவி பிரிந்தம்மா
ஆடித்தான் போனோம் அம்மா நெஞ்சு பதைக்க
ஒழித்து மறைத்ததில்லை எதையும் நாம் உம்மிடத்தில்
பழி பாவம் செய்யாது பாரினிலே நீ நடந்ததால்
வழி தவறவில்லை வழுக்கித்தான் விழுந்ததில்லை
அம்மாஎன்றழைக்க உறவில்லை இனி எமக்கு
எங்களை அன்புடன் பெற்று பாசத்துடன் பாலூட்டி
ஏழ்மையே இல்லாது வளமுடன் வளர்த்து விட்டாய்
அன்பு, அரவனப்பின்றி கண்டிப்பே நாமறியோம்
பள்ளிப்பாடம் முதல் வாழ்கைப்பாதை வரை கற்ப்பித்தாய்
புத்திமதிகள் பல சொன்ன புண்ணியவதியே நீ எங்கே?
கண்ணை இமைகாப்பது போல் எம்மைக் காத்த அன்னையே
நீ எங்கே?
ஆறுதல் வார்த்தை கூறி அன்பு காட்டிய எங்கள் கோயில் எங்கே?
மூன்னூறு நாள் சுமந்த சுமைதாங்கியே நீ எங்கே?
பாரினிலே கடைசியாக படுத்திருந்த அந்த நாட்களும் தான் எம்
நெங்சைவிட்டு மாறுமா?
சேர்த்து வைத்த உள்ளத்தின் குமுறல் அம்மா
ஆறுதலுக்கு நீ இன்றி அழக்கூட முடியவில்லை
விம்மி விம்மி ஏங்கி வெதும்புதம்மா எம்முடம்பு
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள்**

## மருமக்கள் புலம்பல்

பண்பட்ட வாழ்வு பதற்ற முற்று பதறி நிற்கப் பிறர்
கண்பட்டதாலே கவினழிய கருணை கொண்டு பராமல்
புண்பட்ட நெஞ்சங்களை உணராத வகை கொண்டு
விண்பட்ட வியனுலகம் விரும்பி நீ சென்றதேனோ.

சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்த வாழ்வு எழில்
பேருனுடனும் பெரும் புகழுடனும் பொலிந்து நிற்க
யாருடனும் பேசாமல் யாரையும் பகைக்காமல்
ஊரையுமே நினைக்காமல் உத்தமியே சென்றதேனோ.

நிலையிலாச் செல்வம் என்று உணர்ந்ததாலோ
நிலையில்லா வாழ்வு புகழ் என்று நினைத்ததாலோ
நிலையான வாழ்வுதேடி வானுலகம் புகுந்து விட்டாய்
கலை ஞான வாழ்வு தன்னால் பேரின்பம் பெற்று வாழ்க.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிராத்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!ஓம் சாந்தி!!!



## அன்பின் திருவுருவே ஆச்சி

இறைவன் பொலிவுடனே மலந்திட்டீர்
நற்றமிழ் செழித்திட "மாணிக்கமாய்" மிளிர்ந்திட்டீர்
மற்றவர் துயரையும் தன்துயராய் துடைத்திட்டீர்
உற்றார் அற்ற உயிர்க்கெல்லாம் பெற்றவராயினீர்.

நற்கதி நாங்கள் அடைய சொல்லிடுவீர் பல கதைகள்
சொற்றொடர் அமைத்துச் சுவையுடனே பாடிடுவீர் பல பாடல்
பசுமரத்தாணி போல் பதிந்திட்ட உம் வார்த்தைகள்
பல வருடமானாலும் மறக்காது எம் மனதில்

பாட்டி என்று அழைத் போதும் அன்புடனே
ஆச்சி என்று அழைத்த போதும் அணைத்து
உச்சி முகர்ந்து கொஞ்சிடுவீரே! இனி
எப்பம்மா எம்மைக் கொஞ்சுவீர்?

உமது அன்பு முகம் காண வேண்டினோம்
ஊரினில் அனைவரும் கூடிவாழ எண்ணினோர்
பாரினில் ஏற்பட்ட யுத்தத்தால்
பாராது நினைவினிலே தினம் வாழ்கிறோம்.

மறுஜென்மம் உண்டென்பது உண்மையெனின்
மறுபடியும் நீங்கள் வேண்டும் ஆச்சியாய்
மலர்ந்திடுவோம் நாங்கள் அன்புப் பேர்த்திகளாய்
மனமொத்து வாழ்ந்திடுவோம் ஆசைச் சீடர்களாய்.

**வெளிநாட்டிலும், உள்நாட்டினிலும் உள்ள**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

### அயலவர் புலம்பல்

அன்புடனே ஈஞ்சடியான்தாள்
பண்புடனே துதிசெய்து துதிக்கும் அன்னை
இன்பமுடன் சிறந்துலகில் வாழவேண்டி
இனிதாக வாழ்ந்துலகில் இருந்துகாட்டி
அன்பான பிள்ளைகளும் சுற்றத்தாரும்
அருமையாம் கல்விதனை நாளும் கற்க
இன்பமுடன் வழிகாட்டி எம்மை எல்லாம்
ஏற்றமுடன் வாழுவதைப் பார்த்தீர் நீரும்
கல்வியிலே கனிந்தழகு முகத்தில் தோன்ற
கண்ணியமும் கனிந்தன்பும் முகத்தில் காண்போம்
இம்பமுடன் யாவரையும் அன்பு கூர
இதமான வார்த்தைகளை சிந்துவீரே
துன்பமதை உன்முகத்தில் காணோம் நாங்கள்
துடிதுடித்து வரும் தும்பம் எதுவானாலும்
அன்புடனே அதைப்பார்த்துத் தேற்றுவீரே
யாரினிமேல் எமதுதும்பம் துடைப்பார் இங்கு!
எல்லோருக்கும் நல்லவளாய் வாழ்ந்து காட்டி
எழிமையே சிறப்பதுவாய் காண்போம் நாங்கீள்
பல்லோரும் புகழ்து கூறும் உங்கள் பேச்சு
எமதன்பும் இல்லாது போனதம்மா
எங்கினிநாம் உங்களையே காண்போம் அம்மா
எமதுள்ளம் அமைதிபெற சாந்தி கொள்வீர்

**செய்யக்கூடாத செயல்கள்**

விளக்கிற்கும் ஒருவருக்கும் ஊடே
செல்லுதல்கூடாது.
கன்றின் தளைக்கயிற்றைக் தாண்டலாகாது.
ஆகாயத்தில் வானவில்லைக் கண்டால் பிறறை
அழைத்துக் காட்டக்கூடாது.





சிவமயம்

## திருவெம்பாவை

(சத்தியை வியந்தது)

**கொச்சகக் கலிப்பா**

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாழ்தடங்கன்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வாழ்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு) இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என் னேஎன்னே
ஈதேஎந் தோழி பரிசேலோர் எம்பாவாய்!

1

பாசம் பரம்சோதிக்(கு) என்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ(து) எப்போ(து) இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்: நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ: விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்(கு) அன்(பு) ஆர்யாம் ஏலோர் எம்பாவாய்!

2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்து எதிரெழுந்தென்ன
அத்தன்ஆ னந்தன் அமுதன் என்(று) அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்(து) உன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த்(து) ஆட்கொண்டால் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியோர் பாடாரோ னஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்!

3

ஒள்நித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ:
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ:
எண்ணிக்கொ(டு) உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்(று) அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்(கு) ஒரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்(கு) இனையானைப் பாடிக் கசிந்(து) உள்ளம்
உள்நெக்கு நின்(று) உருக யாம்மாட்டோம் நீயே வந்(து)
எண்ணிக் குறையில் துயில்ஏலோர் எம்பாவாய்

4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிநீ! கடைதிறவாய்!
ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்:
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய் 5



மானே! நீ நென்னலை நாளைவந்(து) உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகலாய்: இன்னம் புலர்ந்தின்றோ,
வானே நிலலே பிறவே அறிவறியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குஉன் வாய்திறவாய்
ஊனே உருகாய்: உனக்கே உறும் எமக்கு
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடலோர் எம்பாவாய்!

6

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற்(கு) அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் டேப்ச் சிவன்என்றே வாய்திறப்பாய்
எதன்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழு(கு) ஒப்பாய்:
என்ஆணைஎன் அரையன் இன்னமு(து) என்(று) எல்லோமுஞ்
சொன்னோம்கேள் வெவ்வேறாய்: இன்னம் துயிலுதியோ:
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்!

7

கோழி சிலம்ச் சிலம்பும் குரு(கு) எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்(கு) எங்கும்
ஏழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ்
வாழியீ(து) என்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்!

8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேத்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாழ்பணிவோம் ஆங்(கு) அவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலோர் எம்பாவாய்!

9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலாவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்!

10

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்(து)உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்த்தோம்காண் ஆரழல்போல்
செய்யா! வெண் ணீறடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கன் மடந்தை மணவாளா!
ஐயா நீ ஆட்கொண்(டு) அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்(து) உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீர் ரேலோர் எம்பாவாய்!

12



பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சாதலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போற்றிசைந்த
பொங்கும் மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்(து) ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்

13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்
சோதித் திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்

14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேர் அரையற்(கு) இங்ஙனே பித்(து) ஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப்பூன்முலையீர் வாயா நாம்பாடி
ஏர் உருவப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்!

15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்(து) உடையாள்
என்னத் திகழ்ந்(து) எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்(து) எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!

16

செங்கன வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடிநலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்

17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ ற்றற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுதாய்நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூப்புனல்பாய்ந்(து) ஆடலோர் எம்பாவாய்

18



உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்குஅப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோர் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப்பரிசே எமக்கெங்கோன், நல்குதியோல்
எங்கெழில்என் ஞாயி(று) எமக்கேலோர் எம்பாவாய்

19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்

20

**"யாரிடத்திலிருந்து உயிர்கள் உற்பத்தியாகின்றனவோ யாரால் இவ்வையகம் எல்லாம் வியாபிக்கப்பட்டுள்ளதோ அந்த ஈசுவரனை சுய கருமத்தால் வணங்கி மனிதன் மேன்மை எய்துகின்றான்,,.**

**பகவத்கீதை**

திருச்சிற்றம்பலம்

பிடியதனுருகுமை கொளமிகு கரியது
வடிகொடுதனதடி வழிபடுமவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர்பயில்வலி வலமுறை இறையே

திருச்சிற்றம்பலம்

**ஆறுமுக வணக்கம்**

ஏறுமயி லேறி விளையாடுமுகம் ஒன்று
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்று
கூறுமடியார்கள் வினைதிர்க்கும் முகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்று
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்று
வள்ளியை மணம்புணரவந்தமுகம் ஒன்று
ஆறுமுகமானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.



**கந்தசஷ்டி கவசம்**

**காப்பு**

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்குவல்வினைபோம்
துன்பம்போம்நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும்
நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

குறள் வெண்பா

அமரர் இடர் தீரவமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.



**நூல்**

**நிலைமண்டில ஆசிரியப்பா**



சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிங்கிணி யாட
மையல் நடனஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென்று வந்த
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரிகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறன
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாச அங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்

நிலைபெற் றென்முன் நித்தமுமொ ளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யௌவ்வும்
குண்டலியாம் சிவகுகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியிற் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியிற் இலகுகுண் டலமும்,
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடிய தனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றெனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்



என்தனை வைத்தும் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக்காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்தின வடிவேல் காக்க
சேரிளை முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக

நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகையகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும்புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ரா ட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்



காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாலெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டுக்
கட்டி உருட்டு கை கால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்பும் களுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே முலகமும் எனக்குற வாக

ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொழி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைந்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனை
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சித் அன்னமுஞ்சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க



வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வாறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பதுன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவசம் மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவக்கோள் மகிழ்ந்து நன்மை யனித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்

வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட் கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி,
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரண்ம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**கந்தசஷ்டி கவசம் முற்றிற்று**

**சத்ரு சங்கார வேற் பதிகம்**

**காப்பு**



சண்முகக் கடவுள் போற்றி
சரவணத் துதித்தாய் போற்றி
கண்மணி முருகா! போற்றி
கார்த்திகை பாலா போற்றி
தன்னமலர் கடப்ப மாலை
தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதனவள்ளி
வேலாவா போற்றி போற்றி



## பாக்கியம் கனகலிங்கம் அவர்களின் வம்சவிருத்தி

கந்தப்பு + சின்னாச்சிப்பிள்ளை

- பாக்கியம்
- கனகம்மா
- செல்லத்துரை
- பூரணம்
- துரையப்பா

சின்னையா + சுகசாமிப்பிள்ளை

- கனகலிங்கம்,
- தியாகராசா,
- பொன்னம்மா,
- மயில்வாகனம்,
- கதிர்காமு,
- நல்லம்மா,
- சின்னத்தங்கச்சி

(பாக்கியம் + கனகலிங்கம்)

**இராசாத்தி + நல்லையா** *(விசகடிவைத்தியர்)*

- தர்மகுலராணி(ராணி), — அனோஜா, அனோஜன்
- கேதீஸ்வரன், + ராகினி **(Doha)** — றுக்சன், கஜன்
- யோகராசா, + நந்தினி **(France)** — யோகனா, நவீன், நவன்
- ஜெயராணி(ராதா), + சிவகுமார் **(France)** — லக்ஷன், சிவானி
- யோகராணி(ரமணி) + ஸ்ரீபத்மநாதன் *(பரந்தன் இரசாயனக் கூட்டுதாபனம் நிலா ஆயுர்வேதமருந்தகம், கிளிநொச்சி)* — விதுஷன், லக்ஷனா, யோகிதா, பிரியந்தி (நிலா)
- ஜெகதீஸ்வரன், + கமலா **Denmark** — கார்திகா, ஜனனி
- ஜெயநந்திரானி, + தட்சணாமூர்த்தி, **(France)** — கவிந்தன், தர்சிகா, தருசன்
- கலாராணி(கலா) + ஸ்ரீமூர்த்திவேல் **(France)** — சிவேக்

**பொன்னம்பலம்**
*(இளைப்பாறிய ப.நோ.கூ.சங்கம்)*
**புஸ்பராணி**

**துரைராசா + நித்தியலக்ஷ்மி**
*(கைத்தொழில்)*

- பாஸ்கரன் + தமிழினி - தனுஜன் *(கொலண்ட்)*
- கஜந்தினி + கிருபாகரன் - திவ்வியா *(கொலண்ட்)*
- பிரபாஸ்கரன்
- சுபாஸ்கரன் *(கொலண்ட்)*
- ஜெயபாஸ்கரன் , குருபாஸ்கரன், ஜெயந்தினி
- சுகந்தினி, சாந்தினி

**வேலாயுதம் + மகேஸ்வரி**
*(வியாபாரம்)*

- வரதராசன் + ரூபி *(ஜேர்மனி)*
- வாசுதன் + வளர்மதி *(லண்டன்)*
- வக்சலா + சுபாஸ்கரன் - அபிராமி *(ஜேர்மனி)*
- சுசீலா
- வசந்தன் *(லண்டன்)*
- வாகீசன், கௌசலா

# நன்றி நவில்கின்றோம்

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் எங்கள் குடும்பத் தலைவியாய் வாழ்து. எண்ணிலாக் கடமை களையாற்றி இறைவன் திருவடிப்பேறுபெற்ற திருவாட்டி பாக்கியம் கனகலிங்கம் அவர்கள் சிவபதம் எய்திய செய்தி கேட்டு உடன் வந்து எமது துக்கத்தில் பங்கு கொண்டு பல வகையிலும் உதவிகள் புரிந்து ஈமைக்கிரியைகளில் கலந்து கொண்டு, பல வகை வகையிலும் உதவிகள் புரிந்து, ஈமைக்கியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள்,மலர்அஞ்சலி செலுத்தயோர், செய்தித்தாள்கள் மூலம் இரங்கல் செய்தி வெளியிட்டோர்,அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்கள் தபால், தந்தி, தொலைபேசி மூலம் தெரிவித்தவர் களுக்கும் சந்தர்ப்பம் நோக்கி சாலவும் உதவியோ ருக்கும் இன்று நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனை யிலும், மதியபோசனத்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும், இம் மலரை அழகுறச் அச்சிட்டுத்தந்த ஐங்கரன் (டொட்) கொம், இணுவில். நிறுவனத்தினருக்கும் எமது அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.


வணக்கம்

ஈஞ்சடிவைரவர் கோயிலடி,<br>சுதுமலை வடக்கு<br>மானிப்பாய்.

மக்கள்<br>மருமக்கள், பேரப்பிள்ளைகள்,<br>பூட்டப்பிள்ளைகள்.



கணனிஅச்சுப்பதிப்பு: ஐங்கரன்(டொட்) கொம்,இணுவில்.021.2225789



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய் அதை வீணாக்குவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமாகும்.